# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 232 | 4 Pages | 25.3.2024 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 232 | 4 பக்கங்கள் | 25.3.2024 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


# 2019 தேர்தலில் அளித்த 295 வாக்குறுதிகளையும் பாஜக அரசு நிறைவேற்றி உள்ளது: அண்ணாமலை



சென்னை, மார்ச். 25

சென்னை: 2019 தேர்தலில் அளித்த 295 வாக்குறுதிகளையும் பாஜக அரசு நிறைவேற்றி உள்ளது என தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில்கவுண்டம்பாளையம்தொகுதி ஊழியர் கூட்டம் சத்தி சாலை, சரவணம்பட்டி அருகே அமைந்துள்ள தனியார் வளாகத்தில் இன்று(ஞாயிற்றுக்கிழமை) நடந்தது. அதில், கோவை மக்களவை தொகுதி வேட்பாளர் அண்ணாமலை தலைமை வகித்து பேசினார். தொடர்ந்து செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் கூறியதாவது: கடந்த 2019 மக்களவைத் தேர்தலில் அளித்த 295 வாக்குறுதிகளையும் பாஜக அரசு நிறைவேற்றியுள்ளது. திமுகவை போல் அல்ல.

கோவைக்கு மோடி என்ன செய்திருக்கிறார் என்பது ஒவ்வொரு சாமானிய மக்களுக்கும் தெரியும். அதை அண்ணாமலை வந்து சொல்ல வேண்டும் என்ற அவசியம் இல்லை. கோவையில் மேற்கொள்ளப்பட்டுள்ள வளர்ச்சி திட்டங்கள் அனைத்தும் கடந்த 10 ஆண்டுகளாக பாஜக அரசால் செயல்படுத்தப்பட்டவை ஆகும். கமிஷன் வாங்க வேண்டும் என்ற காரணத்திற்காகவே முந்தைய ஆட்சியாளர்கள் பாலங்களை கட்டி உள்ளனர்.

கோவை மக்களவைத் தொகுதியை சிறப்பான முறையில் மாற்றிக் காட்ட வேண்டும் என்பதற்காகவே தேர்தலில் போட்டியிடுகிறோம். மத்திய அரசுக்கும் கோவைக்கும் நான் ஹாட்லைனாக செயல்படுவேன். கோவையின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பேன்.

யார் என்ன சொல்கின்றனர் என்பதை முழுமையாக எடப்பாடி கேட்பதில்லை. பணம் கொடுக்காமல் கோவையில் ஜெயித்து காட்ட முடியும். தேசிய ஜனநாயக கட்சியின் தொண்டர்கள் தங்களது கை காசை போட்டு கட்சிக்காக செலவழிப்பார்கள்.

இது தான் மாற்று அரசியல். எடப்பாடி பழனிச்சாமி டீ குடிப்பதற்குக் கூட யாரிடமாவது பணம் வாங்கித் தான் குடிப்பார் போல் தெரிகிறது. அதனால் தான் அதை உதாரணமாக பேசி இருக்கின்றார். நாங்கள் டீ குடிப்பது என்றாலும் சொந்தக் காசில் டீ குடிப்போம். இது தான் எங்களுக்கும் எங்கள் தலைவர்களுக்கும் மற்றவர்களுக்கும் இருக்கும் வித்தியாசம்.

உதயநிதி ஸ்டாலின் ஒரு செங்கல்லைகையில்எடுத்துக்கொண்டு செல்லும் அளவிற்கு தான் அவரது அறிவு இருக்கிறது. அரசியலில் பக்குவப்படாதவர்.

பண பலத்தை வைத்து அண்ணாமலையை ஜெயிக்க பார்க்கின்றனர். இதற்காக திமுக அதிமுக வேட்பாளர்கள் இணைந்து கூட செயல்படுவார்கள். ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் மத்திய அரசின் திட்டங்களுக்கு கமிஷன் பெற்று செயல்பட்டுள்ளனர்.

இத்தகைய ஆக்கபூர்வமற்ற செயல்களால் கோவை நகரம் சூடானது தான் மிச்சம். கோவை நகரில் ஆரோக்கியமான சாலைகள்இல்லை.சிறப்பானபூங்காக்கள் இல்லை. கோவை சார்ந்த தேர்தல் அறிக்கை ஏப்ரல் இரண்டாவது வாரம் வெளியிடப்படும்.

ரஷ்யாவின் ஸ்டாலினுக்கும், இங்கிருக்கும் ஸ்டாலினுக்கும் எந்தவித மாறுபாடும் கிடையாது. ஜனநாயகத்தைப் பற்றி பேச ஒரு தலைவருக்கு உரிமை இல்லை என்றால்அதுஸ்டாலின்மட்டுமே. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## முந்திரி தோப்பில் கரடி தாக்கியதில் 2 தொழிலாளர்கள் பலி



திருப்பதி, மார்ச். 25

ஆந்திர மாநிலம் வஜ்ரபு கொத்தூர் அருகே உள்ள அனக்காப்பள்ளியில் ஏராளமான முந்திரி தோட்டங்கள் உள்ளன.

தற்போது முந்திரி பழ சீசன் என்பதால் முந்திரி தோட்டங்களில் தொழிலாளர்கள் பழங்களை பறிக்கும் பணியில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

அனக்காப்பள்ளியை சேர்ந்த லோகநாதம் (வயது 47). கூர்மா ராவ் (49), லோகநாதம் மனைவி சாவித்திரி ஆகியோர் நேற்று காலை முந்திரி தோட்டத்தில் பழங்களை பறிக்கும் பணியில் ஈடுபட்டனர்.

அப்போது முந்திரி தோட்டத்தில் வந்த கரடி திடீரென பாய்ந்து சாவித்திரியை தாக்கியது. கரடி தாக்குவதை கண்ட லோகநாதம் மனைவியை காப்பாற்ற முயன்றார்.

அப்போது கரடி லோகநாதத்தையும் தாக்கியது. இதில் இருவரும் வலியால் அலறி கூச்சலிட்டனர். சத்தம் கேட்டு அருகே இருந்த கூர்மா ராவ் ஓடி வந்து தம்பதியை காப்பாற்ற முயன்றார். அவரையும் கரடி சரமாரியாக தாக்கியது. 3 பேரும் ரத்த வெள்ளத்தில் சரிந்து விழுந்தனர்.

பக்கத்து தோட்டத்தில் வேலை செய்து கொண்டு இருந்த தொழிலாளர்கள் ஓடிவந்து கரடியை துரத்தினர். அப்போது கரடி முந்திரி தோட்டத்திற்குள் ஓடி மறைந்தது. ரத்த வெள்ளத்தில் மயங்கி கிடந்தவர்களை பரிசோதித்த போது லோகநாதம் மற்றும் கூர்மா ராவ் இறந்தது தெரிந்தது.

இதையடுத்து படுகாயம் அடைந்த சாவித்திரியை மீட்டு பலாசா அரசு ஆஸ்பத்திரிக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர். அவர் உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

கரடி தாக்கியதில் 2 பேர் உயிரிழந்ததால் தொழிலாளர்கள் முந்திரி தோட்டத்திற்கு வேலைக்கு செல்ல அச்சம் அடைந்துள்ளனர்.

## நடிகருடன் போட்டோ: கம்யூனிஸ்டு வேட்பாளருக்கு தேர்தல் ஆணையம் எச்சரிக்கை



திருவனந்தபுரம், மார்ச். 25

கேரளாவை சேர்ந்த பிரபல நடிகர் டோவினோ தாமஸ், கேரள மாநில தேர்தல் ஆணையத்தின் வாக்காளர் விழிப்புணர்வு தூதராக உள்ளார்.

இவரை கடந்த சில நாட்களுக்கு முன்பு திருச்சூர் பாராளுமன்ற தொகுதியின் இந்திய கம்யூனிஸ்டு வேட்பாளர் சுனில்குமார் சந்தித்துள்ளார். மேலும் அவருடன் போட்டோ எடுத்துக் கொண்ட சுனில்குமார், அதனை சமூக வலைதளங்களில் பகிர்ந்தார்.

இது தொடர்பாக திருச்சூர் மாவட்ட பாரதிய ஜனதா சார்பில் மாவட்ட தேர்தல் அதிகாரியிடம் புகார் கூறப்பட்டது. இதனை தொடர்ந்து சுனில் குமாரிடம் விளக்கம் கேட்டு தேர்தல் ஆணையம் நோட்டீசு அனுப்பியது.

இதற்கு பதில் அளித்த சுனில்குமார், நடிகர் டொவினோ தாமஸ் தேர்தல் ஆணையத்தின் தூதர் என்பது தனக்குத் தெரியாது என்று தெரிவித்தார். இதனை ஏற்றுக் கொண்ட தேர்தல் ஆணையம் இது போன்ற நடவடிக்கைகளில் இனி ஈடுபடக்கூடாது என்று எச்சரிக்கை விடுத்தது.

## மதுபான ஊழல் வழக்கில் கெஜ்ரிவாலுக்கு எதிராக அப்ரூவராக மாறுவேன்: சுகேஷ் தகவல்

புதுடெல்லி, மார்ச். 25

டெல்லி அரசின் மதுபான கொள்கை முறைகேடு வழக்கு தொடர்பாக டெல்லி முதல்மந்திரியும், ஆம் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளருமான அரவிந்த் கெஜ்ரிவால் கடந்த 21ந்தேதி அமலாக்கத் துறையால் கைது செய்யப்பட்டார்.

வருகிற 28ந்தேதி வரை அவரை அமலாக்கத்துறை காவலில் வைத்து விசாரிக்க கோர்ட்டு அனுமதி வழங்கியது.

இந்த நிலையில் டெல்லி மதுபான கொள்கை வழக்கில் அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு எதிராக அப்ரூவராக மாறுவேன் என்று பல்வேறு மோசடி வழக்குகளில் கைதாகியுள்ள சுகேஷ் சந்திரசேகர் கூறி உள்ளார்.

திகார் சிறையில் உள்ள அவர் டெல்லி கோர்ட்டில ஆஜர்படுத்தப்பட்ட போது இதை தெரிவித்தார். இதுதொடர்பாக சுகேஷ் சந்திரசேகர் நிருபர்களிடம் கூறியதாவது:

அரவிந்த் கெஜ்ரிவால் மற்றும் அவரது குழுவுக்கு எதிராக அப்ரூவராக (அரசு தரப்பு சாட்சி) மாற போகிறேன். அவர்களின் முறைகேடுகள் குறித்த தகவலை வெளிப்படுத்துவேன்.

அவர்களுக்கு எதிரான அனைத்து ஆவணங்களையும் கொடுத்து உள்ளேன். உண்மை வென்றுள்ளது. திகார் சிறைக்கு கெஜ்ரிவாலை வரவேற்கிறேன்.

இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

## டாடா ஏஸ் வாகனம் கழிந்து விபத்து



கள்ளக்குறிச்சி ஏ.எம்.சி மருத்துவமனை எதிரே திமுக கட்சி சார்பாக நடைபெறும் செயல்வீரர்கள் கூட்டத்திற்கு கொட்டையூர் கிராம காலனி பகுதியை சேர்ந்த பொதுமக்கள் மேற்படி கூட்டத்திற்கு வருகை தந்த போது தேசிய நெடுஞ்சாலையில் உள்ள புதுமாம்பட்டு சந்திப்பில் டாட்டா ஏஸ் வாகனம் கவிழ்ந்து விபத்துக்குள்ளான தில் கிட்டத்தட்ட 34 பெண்கள் கள்ளக்குறிச்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.இதில் இரண்டு பெண்கள் மட்டும் மிகவும் கவலைக்கிடமாக உள்ளனர்..

## கள்ளக்குறிச்சியில் இந்தியா கூட்டணி செயல்வீரர்கள் கூட்டம்







கள்ளக்குறிச்சி, மார்ச். 25

கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற தொகுதி இந்தியா கூட்டணி சார்பில் ''திமுக வேட்பாளர் மலையரசன் அறிமுகம்,, மற்றும் செயல்வீரர்கள் கூட்டம் கள்ளக்குறிச்சியில் தொடங்கியது இந்நிகழ்ச்சிக்கு அமைச்சர் எ.வ.வேலு சிறப்பு அழைப்பாளராக பங்கேற்றார். திமுக மாவட்ட செயலாளர்கள் வசந்தம் கார்த்திகேயன் எம்எல்ஏ, உதயசூரியன் எம்எல்ஏ, எஸ்.ஆர்.சிவலிங்கம் மற்றும் திமுக ,காங்கிரஸ், விசிக உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள் , தொண்டர்கள் திரளாக பங்கேற்றனர்



மதுரை மாவட்டம், மேலூர் அருகே மேலவளவில் உள்ள அப்துல்கலாம் வித்யாபவன் நர்சரி மற்றும் பிரைமரி பள்ளியின் 21 ஆம் ஆண்டு விழா மேலவளவு மந்தை திடலில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் பள்ளி மாணவ மாணவிகளின் கலைநிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ மாணவியருக்கு பள்ளியின் தாளாளர் பி.செல்வமணி,பள்ளி முதல்வர் செல்விஜெயபாண்டி ஆகியோர் பாராட்டினர். ஆசிரிய ஆசிரியைகள், கிராம பொதுமக்கள் கலைநிகழ்ச்சியை கண்டுகளித்தனர்.



விழுப்புரம் மாவட்டம் செஞ்சி வட்டாட்சியர் அலுவலகத்தில் பாராளுமன்றத் தேர்தலை முன்னிட்டு கெஞ்சி தொகுதிக்கு உட்பட்ட மின்னனு வாக்குப்பதிவு எந்திரங்கள் அனைத்தையும் தேர்தல் நடத்தும் அலுவலர் (ம)மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் வளர்மதி தலைமையில் வருவாய் வட்டாட்சியர் ஏழுமலை ஆதிதிராவிடர் நலத்துறை தனி வட்டாட்சியர் புஷ்பாவதி மற்றும் வருவாய்த் துறையினருடன் உடன்அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரமுகர்கள் மனதில் மின்னணு இருப்பு அறையை சீல் வைக்கப்பட்டது

# தேர்தல் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய ஹீலியம் பலூன் பறக்க விடுதல் நிகழ்வு



நெல்லை, மார்ச். 25

தென்காசி மாவட்டத்தில் 100 சதவீதம் வாக்குப்பதிவு மற்றும் நேர்மையாக வாக்களித்தல் ஆகியவற்றை வலியுறுத்தி தேர்தல் விழிப்புணர்வு பேரணி, கல்லூரி மாணவர்களுக்கான தேர்தல் விழிப்புணர்வு முகாம், இருசக்கர வாகன பேரணி, முதியோர் இல்லங்களில் முதியோர்களுக்கான விழிப்புணர்வு முகாம், மூன்று இலட்சம் வாக்காளர்களுக்கான மாபெரும் கையெழுத்து இயக்கம் போன்ற பல்வேறு விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அதன் தொடர்ச்சியாக தென்காசியிலுள்ள கோட்டாட்சியர் அலுவலகத்தில் 100% நேர்மையாக வாக்களிப்போம், தேர்தல் நாள் போன்ற தேர்தல் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய ஹீலியம் பலூன் பறக்க விடுதல் நிகழ்வில் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/ மாவட்ட கலெக்டர் ஏ.கே.கமல்கிஷோர் தலைமை தாங்கி தேர்தல் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய ஹீலியம் பலூனை பறக்க விட்டார். இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை தென்காசி கோட்டாட்சியர் அலுவலக அலுவலர்கள், தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்புற வாழ்வாதார இயக்க அலுவலர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

இந்நிகழ்ச்சியில் மகளிர் திட்ட இயக்குநர் இரா.மதி இந்திரா பிரியதர்ஷினி, தென்காசி கோட்டாட்சியர் லாவண்யா, மகளிர் திட்ட உதவி திட்ட அலுவலர்கள் ஏ.ஆ.சிவக்குமார், இ.சாமத் துரை, ஆ.கலைச்செல்வி, . டேவிட் ஜெயசிங், தென்காசி கோட்டாட்சியர் அலுவலர்கள், வட்டார இயக்க மேலாளர்கள், வட்டார ஒருங்கிணைப்பாளர்கள், மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்கள், பொது மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# மலைவாழ் மக்களுக்கு 100 சதவிகிதம் நேர்மையாக வாக்களிப்பது குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி



விருதுநகர், மார்ச். 25

விருதுநகர் மாவட்டம் இராஜபாளையம் அய்யனார் கோயில் மலைவாழ் மக்கள் 12 கி.மீ தூரம் சென்று வாக்களிக்க இருப்பதால், அவர்களுக்கு வாகன வசதி செய்து தரப்படும் மலைவாழ் மக்களுக்கு 100 சதவிகிதம் நேர்மையாக வாக்களிப்பது குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சியில் மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட கலெக்டர் வீ.ப.ஜெயசீலன் தெரிவித்தார்

விருதுநகர் மாவட்டம் இராஜபாளையம் வட்டம் அய்யனார் கோயில் பகுதியில் வசிக்கும் மலைவாழ் மக்களிடம், மக்களவை பொதுத் தேர்தல் 2024 முன்னிட்டு 18 வயது நிரம்பிய அனைவரும் வாக்களிக்க வேண்டி, மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட கலெக்டர் வீ.ப.ஜெயசீலன் நேரில் சென்று விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

விருதுநகர் மாவட்டத்தில் மக்களவை பொதுத் தேர்தல் 2024 முன்னிட்டு எந்த ஒரு வாக்காளரும் விடுபட்டு விடக்கூடாது என்ற நோக்கில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும், 18 வயது நிரம்பிய எந்த ஒரு பகுதியிலும், எந்த ஒரு தரப்பு வாக்காளரும் விடுபடாமல் அனைவரும் வாக்களிக்க வேண்டும் என்ற நோக்கில் மாவட்டத்தின் ஒவ்வொரு பகுதிகளாக அரசு அலுவலர்கள் சென்று விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறார்கள்.

அதன் அடிப்படையில் இன்று இராஜபாளையம் வட்டம் அய்யனார் கோயில் பகுதிகளில் வசிக்கும் மலைவாழ் மக்கள் குடியிருப்பு பகுதிக்கு நேரில் சென்று வாக்களிப்பதன் அவசியத்தை எடுத்துக் கூறி 18 வயது நிரம்பிய அனைத்து வாக்காளர்களும் தவறாமல் வாக்களிக்க வேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட கலெக்டர் கேட்டுக் கொண்டார்.

மேலும் இப்பகுதி மக்கள் வாக்களிக்க வாக்குச்சாவடி மையம் தொலைவில் இருப்பதை கருத்தில் கொண்டு, அவர்களுக்கு தனியாக வாக்குப்பதிவு நாளன்று வாகனம் வசதி ஏற்படுத்தி தரப்படும் என மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட கலெக்டர் தெரிவித்தார்.

மேலும், மலைவாழ் மக்கள் இந்த தேர்தலில் நாங்கள் அனைவரும் தவறாமல் வாக்களித்து ஜனநாய கடமை ஆற்றுவோம் என உறுதி தெரிவித்துக் கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் இராஜபாளையம் வட்டாட்சியர், அரசு அலுவலர்கள், பொதுமக்கள், மலைவாழ் மக்கள் பலர் கலந்து கொண்டனர்.

# 50வது வருடமாக பாதயாத்திரை மோர்பட்டி 24 மணி தெலுங்கு செட்டியார் மகாசபை




பழனி மார்ச்.25

திண்டுக்கல் மாவட்டம் பழனி மூன்றாம் படை வீடான ஸ்ரீ அருள்மிகு தண்டாயுதபாணி திருக்கோவிலுக்கு மோர்பட்டி 24 மணி தெலுங்கு செட்டியார் மகாசபை வாழ் மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஈரோடு மாவட்டம் கொடுமுடியில் இருந்து கோடை வெயில் தொடங்கும் இந்த பங்குனி மாதத்தில் முருகப்பெருமானை குளிர்விக்கும் பொருட்டு பக்தர்கள் கொடுமுடி காவிரி ஆற்றில் இருந்து தீர்த்த காவடி எடுத்து வந்து முருகனை தரிசிக்கின்றோம். 50 வருடமாக பாதயாத்திரை நடந்து வருகின்றோம் வரும் பாதையில் பக்தர்களுக்கு தண்ணீர் பாட்டில்கள் மோர் வழங்கி வருகின்றோம் மற்றும் முருகனின் பக்தி பாடல்களை வருகின்ற வழியில் முருகனுக்கு அரோகரா தண்டாயுதபாணிக்கு அரோகரா கடம்பனுக்கு அரோகரா என்று சந்தோஷத்துடன் முழக்கமிட்டு சொந்த பந்தங்களுடன் பாதயாத்திரை ஆக நடந்து வருவது எங்கள் வாழ்க்கையில் நடக்கும் கஷ்டங்களை மறக்கச் செய்கின்றது. தீராத வியாதியையும் தீர்த்து வைப்பார் என்று இன்னும் நூறு வருடங்கள் நாங்களும் எங்களுடைய அடுத்த தலைமுறைகளும் ஒன்றாக இணைந்து அனைவரும் வருவோம் என்று கூறினார்




கன்னியாகுமரி கலெக்டர் அலுவலக வருவாய் கூட்டரங்கில் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட கலெக்டர் ஸ்ரீதர் தலைமையில் மண்டல அலுவலர்களுக்கான பயிற்சி வழங்கப்பட்டது. உடன் மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (பொது) சுகிதா உள்பட பலர் உள்ளனர்.

# சரக்கு வாகனத்தில் கொண்டு வரப்பட்ட 7 கிலோ தங்கம் 3 கிலோ வெள்ளி பொருட்களை தேர்தல் பறக்கும் படை



ஸ்ரீவில்லிபுத்தூர் மார்ச் 25

ஸ்ரீவில்லிபுத்தூர் சிவகாசி சாலையில் மானசேரி விலக்கு அருகே தேர்தல் பறக்கும் படை தாசில்தார் ரங்கசாமி மற்றும் போலீசார் வாகனசோதனையில் ஈடுபட்டிருந்தனர் அப்பொழுது ஒரு சரக்கு வேன் அந்த வழியாக வந்தது அந்த வேனை பறக்கும் படையினர் நிறுத்தி விசாரிக்கும் போது சிவகாசியில் இருந்து ஸ்ரீவில்லிபுத்தூர் வழியாக ராஜபாளையம் செல்வதாக கூறினார் அப்பொழுது அந்த வேனை பறக்கும் படையினர் சோதனை இட்டபோது அதில் 7 கிலோ தங்க 3 கிலோ வெள்ளி பொருட்கள் இருப்பது தெரிய வந்தது. இவற்றிற்கு போதிய ஆவணங்கள் இல்லை எனவும் கூறப்படுகிறது.

வேனை தொடர்ந்து பறக்கும் படை தாசில்தார் ரங்கசாமி உடனடியாக வேனை மடக்கி ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள உதவி தேர்தல் அதிகாரி கணேசனிடம் ஒப்படைத்தார். இது குறித்து போலீசார் விசாரணையில் நடத்தி வருகின்றனர். பிடிபட்ட தங்கம் வெள்ளி நகைகளின் மதிப்பு 4 கோடி இருக்கும் என கூறப்படுகிறது. மேலும் விருதுநகர் மாவட்ட வருமானவரித்துறை அதிகாரி ராதாகிருஷ்ணன் ஆய்வாளர் கார்த்திகேயன் ஆகியோர் பறிமுதல் செய்யப்பட்ட நகைகளை பார்வையிட்டனர். இதனைத் தொடர்ந்து விருதுநகரிலிருந்து வருமானவரித்துறை அதிகாரிகள் வந்து தீவிர விசாரணை நடத்த உள்ளனர். இந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. இதனை தொடர்ந்து தேர்தல் பறக்கும் படைக்கு வந்த உத்தரவின்படி நேற்று இரவு அழகாபுரி சோதனை சாவடி வன்னியம்பட்டி விளக்கு மானசேரி விளக்கு ஆகிய இடங்களில் பறக்கும் படையினரும் போலீசாரும் விடிய விடிய அனைத்து வாகனங்களையும் நிறுத்தி பல மணிநேரம் சோதனை நடத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கம்பம் அருகே சுருளிப்பட்டியில் தோட்டக்கலை கல்லூரி மாணவிகள் சார்பாக மண் பரிசோதனை முகாம்





கம்பம், மார்ச் 25

தேனி மாவட்டம் கம்பம் அருகே சுருளிப்பட்டி கிராமத்தில் உள்ள தனியார் தோட்டத்தில் பெரியகுளம் தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆரய்ச்சி நிலைய இறுதி ஆண்டு மாணவிகள் சார்பில் மண் பரிசோதனை முகாம் நடைபெற்றது.

இதில் தோட்டக்கலை அலுவலர் அன்பழகன் தலைமையில் வட்டார உதவி தோட்டக்கலை அலுவலர்கள் மோகன்ராஜ் மற்றும் விவேகானந்தன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இம்முகாமில் மாணவிகள் மண் பரிசோதனைக்காக மண் எவ்வாறு எடுக்க வேண்டும் என்பதுடன் அதனை எப்படி மண் பரிசோதனை நிலைக்கு அனுப்ப வேண்டும் என்பது குறித்து செயல் விளக்கம் செய்தனர். இதன்மூலம் ஏராளமான விவசாயிகள் பயன் பெற்றனர்.

மேலும் முன்னோடி விவசாயியான சத்தியமூர்த்தி தனது நிலத்தில் வளர்ந்துள்ள கொக்கோ பயிர் பற்றியும் அதனுடைய தன்மை வளர்ச்சிப் பற்றியும், அதன் மூலம் அவருடைய வெற்றியைப் பற்றியும் மாணவிகளுக்கு விளக்கிக் கூறினார். அவருடன் இணைந்து மாரிமுத்து ( மோண்டலீஸ் இந்தியா புட்ஸ் பிரைவேட் லிட்.,) அவர்களும் கொக்கோ பயிரில் ஒருங்கிணைத்த பூச்சி மற்றும் நோய் பற்றியும் அதன் மேலாண்மை பற்றியும் எடுத்துரைத்தார். இதன் மூலம் மாணவிகளும் பயன்பெற்றனர்.

# ஆலங்குளம் உலகமீட்பர் ஆலயத்தில் குருத்தோலை ஞாயிறு பவனி விழா



ஆலங்குளம் மார்ச் 25

தென்காசி மாவட்டம் ஆலங்குளத்தில் கிறிஸ்தவ மக்களின் முக்கிய பண்டிகைகளில் ஒன்றான ஈஸ்டர் பண்டிகையையொட்டி கடந்த மாதம் பிப்ரவரி 14ம் தேதி சாம்பல் புதனுடன் தவக்காலம் தொடங்கியது. ஈஸ்டர் பண்டிகைக்கு முதல் வாரம் குருத்தோலை ஞாயிறு தினம் கொண்டாடப்பட்டது . கிறிஸ்தவர்கள் குருத்தோலைகளை கையில் ஏந்தி தாவீதின் குமாரனுக்கு ஓசானா என்று பாடல்களை பாடியவாறு பவனியாக செல்வது வழக்கம். ஆலங்குளம் உலகமீட்பர் ஆலயத்தில் குருத்தோலை ஞாயிறு தினம் பங்குத் தந்தை அருள்ராஜ், அருட்தந்தை ஆண்டோ நெல்சன் ஆகியோர் தலைமையில் கொண்டாடப்பட்டது. தேவாலயத்தில் குருத்தோலை அர்ச்சிக்கப்பட்டு இறைமக்களுக்கு வழங்கப்பட்டது. பெண்கள் சிறுவர்கள் உள்பட ஏராமானோர் குருத்தோலைகளை கையில் ஏந்தி ஆலங்குளத்தில் முக்கிய வீதிகளில் பவனியாக சென்றனர்.



பாராளுமன்ற பொதுத்தேர்தல் 2024ஐ முன்னிட்டு கலெக்டர் அலுவலகத்தில் 24 மணி நேரம் இயங்கும் தேர்தல் கட்டுப்பாட்டு அறையினை தூத்துக்குடி பாராளுமன்ற தேர்தல் நடத்தும் அலுவலர், கலெக்டர் லட்சுமிபதி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

# ஆண்டிபட்டி காளியம்மன் கோவில் பங்குனி பொங்கல் விழா



ஆண்டிபட்டி ,மார்ச் .25

தேனி மாவட்டம் ஆண்டிபட்டியில் நடு நாயகமாக வீற்றிருக்கும் காளியம்மன் திருக்கோயில் பொங்கல் விழா கடந்த வெள்ளிக்கிழமை தொடங்கி தொடர்ந்து நான்கு நாட்களாக நடைபெறும். இதன் முக்கிய நிகழ்வாக நேற்று விரதம் இருந்த பக்தர்கள் தீச்சட்டி எடுத்தும் ,பால் குடம் எடுத்தும், காவடி எடுத்தும் தங்கள் நேர்த்திக் கடனை நிறைவேற்றினர். முன்னதாக ஆண்டிபட்டி பெருமாள் கோவிலில் அக்கினி வளர்க்கப்பட்டு, அங்கு முறைப்படி விரதமிருந்த பக்தர்களுக்கு, வாயில் பெரிய அலகுகள் குத்தப்பட்டு ,அங்கிருந்து ஊர்வலமாக முனியாண்டி கோவில், மீனாட்சி அம்மன் கோவில் வழியாக வந்து, அருள்மிகு காளியம்மன் கோவிலில் தங்கள் நேர்த்திக்கடனை செலுத்தினர். இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். ஏராளமான பெண்கள் பொங்கல் வைத்து வழிபட்டனர். தொடர்ந்து ஞாயிற்றுக்கிழமை இரவு அம்மன் சிங்க வாகனத்தில் வீதி உலா வரும் நிகழ்வு நடைபெறும் என்று கோவில் நிர்வாகஸ்தர்கள் தெரிவித்தனர்.



தேனி பாராளுமன்ற தொகுதிக்குட்பட்ட 198 ஆண்டிபட்டி சட்டமன்ற தொகுதி, வாக்குப்பதிவு மையங்களில் பணிபுரியவுள்ள அலுவலர்களுக்கான முதற்கட்ட பயிற்சி வகுப்பு ஆண்டிபட்டி வேளாங்கன்னி மாதா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்று வருவதை தேர்தல் நடத்தும் அலுவலர், கலெக்டர் ஷஜீவனா ஆய்வு மேற்கொண்டார்.

# ஒரு கிலோ கஞ்சா சாக்லேட்டுகள் பறிமுதல்: வடமாநிலத்தவர் கைது



தாராபுரம், மார்ச். 25

தாராபுரம் அருகே 1.150 கிலோகிராம் சாக்லேட்டுகளை தாராபுரம் மதுவிலக்கு அமலாக்கத்துறை காவலர்கள் பறிமுதல் செய்துள்ளனர்.

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் மதுவிலக்கு காவல் ஆய்வாளர் கோவர்த்தனாம்பிகை உத்தரவின் பேரில், கஞ்சா தடுப்பு வேட்டை உதவி ஆய்வாளர் கிருஷ்ணகுமார் தலைமையில், தலைமை காவலர்கள் சரவணன், கருப்புசாமி, மகேஷ் மற்றும் பாண்டிச்செல்வன் ஆகியோர் அடங்கிய காவல்துறையினர் தாராபுரம் அருகில் உள்ள பல்லகவுண்டன்பாளையம் பிரிவு அருகே ரோந்து பணி மேற்கொண்டிருந்த பொழுது, அங்கே சந்தேகத்திற்கிடமான வகையில் நின்று கொண்டிருந்த நபரை பிடித்து விசாரித்ததில் அவர் 1.150 கிலோகிராம் கஞ்சா சாக்லேட்டுகள் வைத்திருந்தது தெரிய வந்துள்ளது. ஆகவே அவரை காவல் நிலையம் அழைத்து வந்து விசாரித்துள்ளனர். விசாரணையில் அந்த நபர் ஒடிசா மாநிலம் பத்ராக் மாவட்டம், கும்பக்கரை, பதன்படா என்ற முகவரியில் வசித்து வரும், நாராயண ஜனா என்பவரின் மகனான பத்மநாபஜனா (49) என்பது தெரிய வந்துள்ளது. அந்த நபர் மீது வழக்கு பதிவு செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்திய காவல்துறையினர் அவரை திருப்பூர் சிறைக்கு அழைத்துச் சென்றனர்.

# தஞ்சை ஜேசீ ஈவ்ஸ் கேப்பிட்டல் சார்பில் 13 சாதனை மகளிருக்கு விருது: துணை மேயர் வழங்கினார்



தாராபுரம், மார்ச். 25

தாராபுரம் அருகே 1.150 கிலோகிராம் சாக்லேட்டுகளை தாராபுரம் மதுவிலக்கு அமலாக்கத்துறை காவலர்கள் பறிமுதல் செய்துள்ளனர்.

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் மதுவிலக்கு காவல் ஆய்வாளர் கோவர்த்தனாம்பிகை உத்தரவின் பேரில், கஞ்சா தடுப்பு வேட்டை உதவி ஆய்வாளர் கிருஷ்ணகுமார் தலைமையில், தலைமை காவலர்கள் சரவணன், கருப்புசாமி, மகேஷ் மற்றும் பாண்டிச்செல்வன் ஆகியோர் அடங்கிய காவல்துறையினர் தாராபுரம் அருகில் உள்ள பல்லகவுண்டன்பாளையம் பிரிவு அருகே ரோந்து பணி மேற்கொண்டிருந்த பொழுது, அங்கே சந்தேகத்திற்கிடமான வகையில் நின்று கொண்டிருந்த நபரை பிடித்து விசாரித்ததில் அவர் 1.150 கிலோகிராம் கஞ்சா சாக்லேட்டுகள் வைத்திருந்தது தெரிய வந்துள்ளது. ஆகவே அவரை காவல் நிலையம் அழைத்து வந்து விசாரித்துள்ளனர். விசாரணையில் அந்த நபர் ஒடிசா மாநிலம் பத்ராக் மாவட்டம், கும்பக்கரை, பதன்படா என்ற முகவரியில் வசித்து வரும், நாராயண ஜனா என்பவரின் மகனான பத்மநாபஜனா (49) என்பது தெரிய வந்துள்ளது. அந்த நபர் மீது வழக்கு பதிவு செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்திய காவல்துறையினர் அவரை திருப்பூர் சிறைக்கு அழைத்துச் சென்றனர்.

# மக்கள் அடிப்படை தேவைகளை நிறைவேற்றும் கட்சிக்கு ஆதரவு கலப்பை மக்கள் இயக்க தலைவர் பி.டி.செல்வகுமார் நாகர்கோவில் பேட்டி



நாகர்கோவில், மார்ச்.25

மக்களவைத் தேர்தலில் மக்களுக்கான அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற வாக்குறுதி அளிக்கும் கட்சிக்கு கலப்பை மக்கள் இயக்கம் தனது ஆதரவை வழங்கும் என இயக்கத்தின் நிறுவன தலைவர் பி.டி.செல்வகுமார் தெரிவித்தார் மேலும் அவர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் இந்தியாவில் மக்களவை தேர்தல் 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை வருகிறது. இதில் வெற்றி பெறும் மக்கள் பிரதிநிதிகள் மக்களுக்கு அளிக்கும் வாக்குறுதிகளை நிச்சமாக நிறைவேற்றவேண்டும்.கலப்பை மக்கள் இயக்கம் எதையும் எதிர்பார்க்காமல் கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக பல்வேறு சமூக பணிகளை மக்களுக்காக செய்து வருகிறது. இந்த தேர்தலைப் பொறுத்தவரை கன்னியாகுமரி மாவட்டத்தில் தொழில் வளத்தை ஏற்படுத்தும் வகையிலும், இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உறுதி செய்யும் நோக்கத்துடனும் தொழில்நுட்ப பூங்கா அமைக்கப்பட வேண்டும். மேலும், இம்மாவட்டத்தில் தென்னை மரங்கள் அதிகமாக உள்ளதால், இங்கு விளைச்சலாகும் தேங்காய் தரம் வாய்ந்ததாக உள்ளது. எனவே, தென்னை மர விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் தென்னை பொருட்கள் ஏற்றுமதி மையம் அமைக்க வேண்டும். கேரள மாநிலம் குமரி மாவட்டத்துக்கு மிக அருகாமையில் உள்ளதால் எல்லைப்பகுதியில் நவீன வியாபார சந்தை உருவாக்கப்பட வேண்டும். மேலும், கன்னியாகுமரி மாவட்ட மக்கள் வெளியூர்களுக்கு எளிதாக செல்லவும், சுற்றுலாத் தொழில் மேம்படவும் வசதியாக விமான நிலையம் அமைக்கப்பட வேண்டும். இம்மாவட்டத்தில் உள்ள சுற்றுலாத் தலங்கள் அனைத்தும் சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் நவீனப்படுத்தப்பட வேண்டும்.

இம்மாவட்டத்தில் மீன்பிடித் தொழில் பிரதானமாக உள்ளதால்

மீனவர்களுக்கான அடிப்படை தேவைகள் நிறைவேற்றப்படுவதுடன், காணாமல் போகும் மீனவர்களை எளிதில் கண்டுபிடிக்கும் வகையில் ஹெலிகாப்டர் தளம் அமைக்கப்பட வேண்டும். மேலும், சுசீந்திரம் பழையாற்றில் இருந்து வீணாக கடலில் கலக்கும் தண்ணீரை சேமிக்கும் வகையில் விவசாய மக்களின் நீண்டநாள் கோரிக்கையான தடுப்பணை அமைக்கப்பட வேண்டும்.

இந்த கோரிக்கைகள் அனைத்தையும் நிறைவேற்ற வாக்குறுதி அளிக்கும் கட்சி வேட்பாளருக்கு கலப்பை மக்கள் இயக்கம் ஆதரவளிக்க தயாராக உள்ளது இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# வேலூர் நாடாளுமன்ற தொகுதி வேட்பாளர் டி.எம்.கதிர் ஆனந்த் ஆதரித்து வேட்பாளர் அறிமுகம் மற்றும் செயல்வீரர் கூட்டம்







திமுக என்ன பொட்டுபூச்சியா அழித்து விடுவதற்கு. திமுகவை எந்த கொம்பனாலும் அழிக்க முடியாது. ஆம்பூரில் நடந்த மதச்சார்பற்ற முற்போக்கு இந்தியா கூட்டணி சார்பில் போட்டியிடும் வேலூர் நாடாளுமன்ற தொகுதி வேட்பாளர் டி.எம்.கதிர் ஆனந்த் ஆதரித்து வேட்பாளர் அறிமுகம் மற்றும் செயல்வீரர் கூட்டத்தில் நீர் வளத்துறை அமைச்சர் துரைமுருகன் பேசினார்.

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூரில் மதச்சார்பற்ற முற்போக்கு இந்தியா கூட்டணி சார்பில் போட்டியிடும் வேலூர் நாடாளுமன்ற தொகுதி வேட்பாளர் டி.எம்.கதிர் ஆனந்த் ஆதரித்து வேட்பாளர் அறிமுகம் மற்றும் செயல்வீரர் கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு திமுக மாவட்ட செயலாளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான க. தேவராஜி தலைமை வகித்தார். திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் நல்லதம்பி, மாவட்டத் துணைச் செயலாளர்சம்பத், அவைத் தலைவர் ஆர்.எஸ்.ஆனந்தன், ஆம்பூர் தொகுதி தேர்தல் பொறுப்பாளர் சுகவனம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.சி.வில்வாதன் அனைவரையும் வரவேற்றார்.

கூட்டணி கட்சிகளான காங்கிரஸ் கட்சி மாநில பொதுச் செயலாளர் விஜய் இளஞ்செழியன், மாவட்ட தலைவர் எஸ்.பிரபு, இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் தேசிய செயலாளர் ஹெச். அப்துல் பாசித், மனிதநேய மக்கள் கட்சி மாவட்ட தலைவர் வி.ஆர்.நஜீர் அஹமத், மதிமுக மாவட்ட செயலாளர் கண்ணதாசன், விடுதலை சிறுத்தை கட்சி மாவட்ட செயலாளர் ஓ.எம்.பிரகாசம் உட்பட தோழமை கட்சி நிர்வாகிகள் ஆகியோர் வேலூர் நாடாளுமன்ற திமுக வேட்பாளர் கதிர் ஆனந்த் ஆதரித்து பேசினர். கூட்டத்தில்சிறப்பு அழைப்பாளர்களாக திமுக பொதுச் செயலாளரும் நீர்வளத் துறை அமைச்சருமான துரைமுருகன், பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு ஆகியோர் கலந்து கொண்டு வேட்பாளர் டி.எம்.கதிர் ஆனந்த் அறிமுகம் செய்து வைத்து சிறப்புரையாற்றினார்.

அப்போது வேலூர் நாடாளுமன்ற வேட்பாளர் கதிர் ஆனந்த் பேசுகையில்:

வாணியம்பாடி மற்றும் ஆம்பூர் மக்கள் கடந்த நாடாளுமன்ற தேர்தலில் வெற்றிபெற செய்ததை வாழ்நாள் முழுவதும் நான் மறக்கமாட்டேன்.

அமைச்சர் எ.வ.வேலு பேசுகையில்:

சி.ஏ.ஏ சட்டம் வருவதற்கு எடப்பாடி பழனிசாமி வகையாரா தான் காரணம். ஏ.சி. சண்முகம் கடந்த காலங்களில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த போது மக்களுக்கு தொண்டாற்ற அடையாளம் ஏதாவது காண்பிக்க சொல்லுங்கள். அவர் அல்வா கொடுப்பதில் வல்லவர்.

திமுக பொதுச்செயலாளர் துரை முருகன் பேசுகையில்:

இந்த தேர்தல் ஆட்சி மாற்றத்திற்கான தேர்தல் அல்ல! இது ஜனநாயகத்தை காப்பதற்கான தேர்தல், இந்திய அரசமைப்புச் சட்டத்தை காப்பதற்கான தேர்தல், மோடி மீண்டும் ஆட்சிக்கு வந்தால் திமுகவையும் அதன் கூட்டணி கட்சிகளையும் சுக்குநூறாக ஆக்குவேன் என சொன்னார். இப்டியா ஒரு பிரதமர் பேசுவது. திமுக என்ன பொட்டு பூச்சியா அழித்து விடுவதற்கு. திமுகவை எந்த கொம்பனாலும் அழிக்க முடியாது. மோடி என்ன சாதனைகளை செய்தார் சொல்லி ஓட்டு கேட்பார். யார் வேண்டுமானாலும் இந்தியாவுக்குள் வரலாம் என்று சொன்னார்.

ஆனால் இப்போது முஸ்லீம்கள், கிறிஸ்துவர்கள் இலங்கை தமிழர்கள் வரக்கூடாது என சட்டம் ஏற்றுவார்.

ஏன் அவர்கள் வரக்கூடாது அவர்களெல்லாம் இந்த நாட்டின் காற்றை சுவாசிக்கவில்லையா?

சுதந்திரம் வாங்கியதற்கு நீங்கள் போராடி இருக்கிறீர்களா, ஆனால் முஸ்லிம்கள் போராடி இருக்கிறார்கள் ,உயிர் நீத்திருக்கிறார்கள். தேசிய கொடியை வடிவமைத்து கொடுத்தவர் கூட ஒரு இஸ்லாமியர் தான் என்பதை நினைவில் கொள்ள வேண்டும் என்று பேசினார்.

கூட்டத்தில் ஆம்பூர் நகர மன்ற தலைவர் பி.ஏஜாஸ் அஹமத், நகர கழக செயலாளர் எம்.ஆர் ஆறுமுகம், ஒன்றிய குழு தலைவர்கள் சுரேஷ் குமார்(மாதனூர்), துணைத்தலைவர் சாந்தி சீனிவாசன், சங்கீதா பாரி (ஆலங்காயம்), ஆலங்காயம் மேற்கு ஒன்றிய செயலாளர் வி.எஸ்.ஞானவேலன், கிழக்கு ஒன்றிய செய்லாளர் தாமோதரன், சீனிவாசன், செயற்குழு உறுப்பினர் எம்.அசோகன், பொதுக்குழு உறுப்பினர் கோவிந் அம்மாள்பெருமாள், ஆர்.டி.சாமுவேல் செல்லப்பாண்டியன், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் பழனி, மாவட்ட ஒட்டுணரணி அமைப்பாளர் எஸ்.ராஜா, மாவட்ட விவசாய அணி துணை செயலாளர் கே.புருஷோத்தமன் உட்பட கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் மற்றும்

தோழமை கட்சி நிர்வாகிகள், தொண்டர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# நான் பீடிமோ ஏடிமோ இல்லை மக்களுக்காக பணியாற்ற தேர்தலில் நிற்கிறேன்: மக்களை சந்தித்த பின்னர் வேலூரில் நடிகர் மன்சூர் அலிகான் பேட்டி



வேலூர் மாவட்டம்,வேலூரில் உள்ள மீன் மற்றும் இறைச்சி மார்கெட்டில் நடிகர் இந்திய ஜனநாயக புலிகள் கழகம் தலைவர் மன்சூர் அலிகான் மக்களை சந்தித்தார்

பின்னர் நடிகர் மன்சூர் அலிகான் செய்தியாளர்களிடம் கூறுகையில் எனக்கு யாரும் பிரச்சாரம் செய்ய அவசியம் இல்லை நான் தான் இங்கு வெற்றி பெறபோகிறேன் பல அமைப்புகள் மக்கள் ஆயிரக்கணக்கானோர் கேட்டு கொண்டதற்கு இணங்கள் இங்கு போட்டியிடுகிறேன்

திமுக,காங்கிரஸ் அதிமுக மாறி மாறி நாட்டை பல ஆண்டுகளாக ஆண்டனர் ஆனால் மக்கள் பிச்சைகாரர்களாகவே இருக்கின்றனர் மோடி நடத்துவது நாடக தேர்தல் மோடி எல்லாத்தையும் முன் கூட்டியே செய்துவிட்டுதான் தேர்தலை நடத்துகிறார் ஆரம்பத்திலிருந்து சொல்கிறேன் ஆளுநரே தேவையில்லை ஆளுநர் பதவி என்பதே தேவையில்லாத ஒன்று மக்கள் முன் நீங்கள் பார்க்கதான் போகிறீர்கள் ஓட்டு மெஷினை எதிர்த்து யாரும் பேசவில்லை நான் பாராளுமன்றம் சென்றால் வாக்கு சீட்டு மூலம் தேர்தலை நடத்த சொல்லுவேன் இது போலி ஜனநாயகம் ஏமாற்று வேலை பிஜேபி அதிமுகவுக்கு பி டீம் என இல்லை எ டூ இசட் நான் தான் மக்களிடம் சின்னத்தை கொண்டுசென்று பெரிய அளவில் பிரளயத்தை ஏற்படுத்துவேன் இன்றைக்கு வேட்பாளர் அறிமுக கூட்டத்தில் பங்கேற்கவுள்ளேன் திமுக அண்ணா சின்னத்தை வைத்து ஏமாற்றி குடும்பத்தை வளர்க்கின்றனர் இப்படி இருக்கும் போது தனி ஒருவனாக போராடுகிறேன் ஏ டீமா பீ டீமா என்பது பின்னர் தெரியும் மலைகளை பசுமையாக்குவேன் ஏரிகளை அதிகம் இம்மாவட்டத்தில் அமைக்க வேண்டும் என கூறினார்



பாராளுமன்ற மக்களவை பொதுத்தேர்தல் 2024ஐ முன்னிட்டு நிர்மலா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெறும் வாக்கு பதிவு அலுவலர்களுக்கான முதற்கட்ட பயிற்சி வகுப்பினை மாவட்ட தேர்தல் அலுவலர், மாவட்ட கலெக்டர் கிராந்தி குமார் நேரில் பார்வையிட்டு ஆலோசனை வழங்கினார்.

# கருடன்' படம் : ரிலீஸ் எப்போது ? நடிகர் சூரி




'கருடன்' திரைப்படத்தில் பிரபல நடிகர் சசிகுமார் கதாநாயகனாக நடித்து வருகிறார். இப்படத்தில் உன்னி முகுந்தன், சமுத்திரக்கனி, மைம் கோபி உள்ளிட்ட பலர் நடிக்கின்றனர். யுவன் சங்கர் ராஜா இசையமைக்கிறார். இந்த படத்தில் நகைச்சுவை வேடத்தில் சூரி நடிக்கிறார்.

இவர் வருத்தப்படாத வாலிபர் சங்கம், ரஜினி முருகன் தேசிங்கு ராஜா, ஜீவா,வேதாளம், ஜில்லா உள்ளிட்ட படங்கள் வெற்றி அடைந்தது. அதைத் தொடர்ந்து கதாநாயகனாக நடித்தும் வெற்றி பெற்றார்.மேலும் 'விடுதலை' படத்தில் ஹிட் ஆனது. கடும் உடற்பயிற்சி செய்து 'சிக்ஸ் பேக்' உடலில் போலீஸ் கான்ஸ்டபிள் குமரேசனாக நடித்தார்.


இந்த படத்தின் வெற்றியை தொடர்ந்து விடுதலை 2 பாகம் உருவாகி வருகிறது.இந்நிலையில் இயக்குனர் துரைசெந்தில்குமார் இயக்கத்தில் 'கருடன்' படப்பிடிப்பு தற்போது விறுவிறுப்பாக நடந்து வருகிறது.இந்நிலையில், மதுரையில் ஒரு திருமண நிகழ்ச்சியில் கலந்து கொண்ட நடிகர் சூரி கூறியதாவது :

விடுதலை 2 படத்தில் என்னுடைய படப்பிடிப்புக்கான காட்சிகள் அனைத்தும் முடிந்து விட்டது. ஆனால், இன்னும் சில காட்சிகள் மட்டும் எடுக்க வேண்டி உள்ளது. படம் விரைவில் ரிலீஸ் ஆக உள்ளது. மேலும் தற்போது நான் நடிக்கும் 'கருடன்' படத்தின் படப்பிடிப்புகள் முடிந்துவிட்டது.

'விடுதலை 2' படத்திற்கு முன்னதாக 'கருடன்' படம் ரிலீஸ் ஆகி விடும். விடுதலை 2 படம் போலவே 'கருடன்' படமும் ஒரு நல்ல படமாகும். இந்த படம் அனைவரையும் கவரும் வகையில் அமைந்து உள்ளது.

தற்போது தேர்தல் பிரச்சாரத்திற்கு என்னை யாரும் அழைக்க வில்லை.படம் நடிப்பில் நான் 'பிஸி' ஆக இருக்கிறேன்''.என தெரிவித்தார்.

# 'தி புரூப்' : ஆக்ஷன் வேடத்தில் தன்ஷிகா




பிரபல நடிகை சாய் தன்ஷிகா தமிழில் மாஞ்சா வேலு, பேராண்மை, கபாலி, இருட்டு போன்ற படங்களில் முக்கிய வேடத்தில் நடித்து உள்ளார். மேலும் மலையாளம், தெலுங்கு உள்ளிட்ட படங்களிலும் நடித்து உள்ளார்.

இந்நிலையில் கோல்டன் ஸ்டூடியோஸ் 23 என்ற பட நிறுவனம் சார்பில் கோமதி சத்யா தயாரிக்கும் 'தி புரூப்' என்ற புதிய படத்தில் சாய் தன்ஷிகா தற்போது முக்கிய வேடத்தில் நடிக்கிறார்.

'ஆக்ஷன்' படமாக உருவாகும் இந்த படத்தை இயக்குனர் ராதிகா மாஸ்டர் இயக்குகிறார். ரித்விகா, அசோக் ஆகியோரும் இந்த படத்தில் நடித்து உள்ளனர்.

இப்படம் தமிழ், தெலுங்கு, இந்தி மொழிகளில் தயாராகி வருகிறது. இந்த படத்தின் முதல் பார்வை தற்போது வெளியாகி உள்ளது. அதில் பிரமாண்ட சண்டைக் காட்சியில் எதிரியின் நெஞ்சில் ஏறி தன்ஷிகா ஆவேசமாக கால் வைத்து நிற்பது போன்று அந்த போஸ்டர் காட்சி இடம்பெற்று உள்ளது. இந்த படப்பிப்புகள் வேகமாக நடந்து வருகிறது. வருகிற ஏப்ரல் மாதம் இந்த படத்தை ரிலீஸ் செய்ய திட்டமிடப்பட்டு ஏற்பாடுகள் நடந்து வருகிறது. இந்த படம் விரைவில் தன்ஷிகாவுக்கு 'ஆக்ஷன்' நாயகி என்ற பட்டத்தை பெற்று தரும் ரசிகர்கள் இணைய தளத்தில் பாராட்டு தெரிவித்து வாழ்த்தி வருகின்றனர்.

# காமெடி நடிகர் பாலாவுக்கு பரிசளிக்க பைக் பொம்மை தயார் செய்த மாணவர் ஜெகதீஸ்



சின்னத்திரை காமெடி நடிகராக லட்சக் கணக்கானோர் மனதில் இடம் பிடித்தவர் பாலா. இவரது சமூக சேவை பணிகள் வைரலாகி வருகின்றன.

அந்த வகையில் மேல்மருவத்தூரில் கல்லூரியில் படித்து கொண்டே பெட்ரோல் பங்கில் வேலை பார்க்கும் இளைஞரின் வறுமையை உணர்ந்து அந்தமாணவருக்குபைக்கைபரிசாக பாலா வழங்கினார்.

அனைவராலும் பாராட்டப்பட்ட இதனை செய்தியாக கடந்து விடாமல் கலை சிற்பமாக மாணவர் ஒருவர் வடிவமைத்துள்ளார். புதுச்சேரி சேலியமேடு கிராமத்தில் அரசு மேல்நிலைப் பள்ளியில் பிளஸ்2படிக்கும்மாணவர்ஜெகதீஷ் கலை பொம்மையாக மாற்றியுள்ளார்.

பள்ளியின் நுண்கலை ஆசிரியர் உமாபதி கடந்த சில ஆண்டுகளாக மாணவர்களுக்கு கிராமங்களில் கிடைக்கும் பயனற்ற தேங்காய் குருமி,தென்னை நார், சுரக்காய் குடுவை போன்றவற்றைக் கொண்டு கலைநயமிக்க பொம்மைகளை உருவாக்கும் பயிற்சி அளித்து வந்தார்.

இதில் பயிற்சி பெற்ற மாணவர் ஜெகதீஷ்,நடிகர் பாலா ஏழை இளைஞருக்கு பைக் வழங்கிய சம்பவத்தை பொம்மையாக உருவாக்கி உள்ளார்.இந்த பைக் பொம்மையை பாலாவுக்கு தான் தர விரும்புவதாக கூறியுள்ளார்.

தான் சென்னைக்கு செல்ல இயலாது என்ற காரணத்தினால் புதுச்சேரிக்கு நடிகர் பாலா எப்பொழுது வருகிறாரோ அப்போது தருவதற்கு தயாராக இருப்பதாக தெரிவித்துள்ளார்

# 'அண்ணாத்த ஆடுறாரு ஒத்திக்க' சுந்தரம் மாஸ்டருடன் கமல்ஹாசன்




நடிகர் கமல்ஹாசன் சினிமாவின் மீது அதிகம் பற்று கொண்டவர். தமிழ் சினிமாவின் வளர்ச்சிக்கு முக்கிய பங்கு கமல்ஹாசனுக்கு உண்டு. புது புது தொழில் நுட்பத்தை தமிழ் சினிமாவிற்கு அவர் எடுக்கும் படங்கள் மூலம் அறிமுகம் செய்துள்ளார். வெற்றியோ தோல்வியோ கமல்ஹாசன் அதை பற்றியெல்லாம் கவலைப்பட மாட்டார், புதுப்புது முயற்சிகளையும், சோதனைகளையும் செய்து கொண்டே இருப்பார்.

முதன் முதலில் 1986 ஆம் ஆண்டு அவர் நடித்து வெளியானவிக்ரம்படத்தில் வரும் பாடல்கள் அனைத்தும் கணினியை வைத்து ரெக்கார்ட் செய்யப்பட்ட பாடல்கள். 1994 ஆம் ஆண்டு வெளிவந்த மகாநதி படத்தில் ஏவிட் என்ற எடிட்டிங் சாஃப்ட்வேரை அறிமுகப் படுத்தினார்.

குருதிபுனல் படத்தில் முதல் முதலாக டோல்பி ஸ்டீரியோ சவுண்ட் சிஸ்டத்தை அறிமுகப்படுத்தினார். லைவ் சவுண்ட் ரெகார்டிங் தொழில்நுட்பத்தை விருமாண்டி படத்தின் மூலம் அறிமுகப்படுத்தினார்.

இந்நிலையில் கமல்ஹாசன் இயக்குனர் சிங்கீதம் ஸ்ரீனிவாச ராவ் அவர்களின் பெருமையை போற்றும் வகையில் மார்ச் 20 ஆம் தேதி அபூர்வ சிங்கீதம் என்ற திரைப்பட விழா நடத்தினார்.

இத்திரைப்படவிழாவில் ராஜபார்வை, பேசும் படம், அபூர்வ சகோதரர்கள், மும்பை எக்ஸ்பிரஸ் படங்களை திரையிட்டனர்.

வைரமுத்து, லோகேஷ் கனகராஜ், சிதம்பரம், மணி ரத்னம், சுகாசினி போன்ற பல திரைப்பிரபலங்கள் கலந்துக் கொண்டனர். இந்நிலையில் கமல்ஹாசன் இன்ஸ்டாகிராமில் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அதில்கமல்ஹாசன்நடனஇயக்குனரானசுந்திரம்மாஸ்டருடன்எடுத்துக்கொண்டபுகைப்படத்தைபகிர்ந்துள்ளார். அதில் "அன்ணாத்த ஆடுறார்" அபூர்வ சிங்கீதம் நிகழ்ச்சிக்கு வந்திருந்த சுந்திரம் மாஸ்டருடன் ஒத்தைகாலில் நின்று ஒரு ஃபோட்டோ எடுத்துக் கொண்டேன் என்று பதிவு செய்திருக்கிறார்.

# மும்பை இந்தியன்ஸ் அணிக்கு 169 ரன்கள் இலக்கு நிர்ணயித்த குஜராத்



ஐபிஎல் தொடரின் 5வது லீக் போட்டியில் மும்பை குஜராத் அணிகள் மோதுகிறது. இதில் டாஸ் வென்ற மும்பை அணி பந்து வீச்சை தேர்வு செய்தது.

அதன்படி குஜராத் அணியின் தொடக்க வீரர்களாக சுப்மன் கில் சகா களமிறங்கினர். 15 ரன்களில் சகா பும்ரா பந்து வீச்சில் போல்ட் ஆனார். அவர் அவுட் ஆன சிறிது நேரத்தில் கில் 31 ரன்னில் வெளியேறினார்.

நிதானமாக விளையாடிய சுதர்சன் 45 ரன்னிலும் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த ஓமர்சாய் 17, மில்லர் 12, தெவாட்டியா 22 என வெளியேற இறுதியில் குஜராத் அணி 20 ஓவர் முடிவில் 6 விக்கெட்டுகளை இழந்து 168 ரன்கள் சேர்த்தது. மும்பை தரப்பில் பும்ரா 3 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

# 20 ரன்கள் வித்தியாசத்தில் லக்னோவை வீழ்த்தியது ராஜஸ்தான்



ஐபிஎல் கிரிக்கெட் தொடரின் 4வது லீக் ஆட்டத்தில் ராஜஸ்தான் லக்னோ அணிகள் மோதியது. இதில் டாஸ் வென்ற ராஜஸ்தான் ராயல்ஸ் அணி பேட்டிங்கை தேர்வு செய்துள்ளது.

அதன்படி, ராஜஸ்தான் ராயல்ஸ் அணியின் தொடக்க ஆட்டகாரர்களாகஜெய்ஸ்வால்ஜாஸ்பட்லர்களமிறங்கினர். பட்லர் 11 ரன்னிலும் ஜெய்ஸ்வால் 24 ரன்னிலும் அவுட் ஆகினர். இதனையடுத்து கேப்டன் சாம்சன் மற்றும் பராக் ஜோடி அதிரடியாக விளையாடி ரன்களை சேர்த்தனர்.

சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய சாம்சன் அரை சதம் விளாசினார். மறுமுனையில் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய பராக் 29 பந்தில் 43 ரன்கள் எடுத்து வெளியேறினார். அடுத்து வந்த ஹெட்மயர் 5 ரன்களில் ஆட்டமிழந்தார்.

இறுதியில் ராஜஸ்தான் அணி 20 ஓவர் முடிவில் 4 விக்கெட்டுகளை இழந்து 193 ரன்கள் எடுத்தது. சாம்சன் கடைசி வரை ஆட்டமிழக்காமல் 82 ரன்கள் சேர்த்தார்.

இதனையடுத்து லக்னோ அணியின் தொடக்க ஆட்டகாரர்களாக டிகாக் கேஎல் ராகுல் களமிறங்கினர். அதிரடியுடன் தொடங்கிய டிகாக் (4) முதல் ஓவரிலேயே விக்கெட்டை பறிகொடுத்தார். அடுத்து வந்த படிக்கல் 0, பதோனி 1, ஹூடா 26 என வெளியேறினர்.

இதனையடுத்து கேஎல் ராகுல் மற்றும் பூரான் இருவரும் ஜோடி சேர்ந்து பொறுப்புடன் ஆடி ரன்களை சேர்ந்தனர். சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய கேஎல் ராகுல் (58) அரை சதம் விளாசி வெளியேறினார். கடைசி வரை போராடிய பூரான் 64 ரன்கள் எடுத்து இறுதி வரை களத்தில் இருந்தார்.

இறுதியில் லக்னோ அணி 20 ஓவர் முடிவில் 6 விக்கெட்டுகளை இழந்து 173 ரன்கள் எடுத்தது. இதனால் ராஜஸ்தான் அணி 20 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. ராஜஸ்தான் தரப்பில் போல்ட் 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

# மயங்க் அகர்வாலை சீண்டிய ராணாவுக்கு அபராதம்



ஐபிஎல் 2024 சீசனின் 3வது போட்டி ஈடன் கார்டன் மைதானத்தில் நடைபெற்றது. இதில் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணிகள் மோதின.

முதலில் விளையாடிய கொல்கத்தா நைட்ரைடர்ஸ் 7 விக்கெட் இழப்பிற்கு 208 ரன்கள் குவித்தது. பின்னர் 209 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் சன்ரைசர்ஸ் ஐதராபாத் அணி களம் இறங்கியது. பரபரப்பான ஆட்டத்தில் சன்ரைசர்ஸ் ஐதராபாத் 20 ஓவரில் 7 விக்கெட் இழப்பிற்கு 204 ரன்கள் எடுத்தது. இதனால் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி 4 ரன் வித்தியாசத்தில் த்ரில் வெற்றி பெற்றது.

இந்த போட்டியில் ஐதரபாத் அணி பேட்டிங் செய்த போது அகர்வாலை விக்கெட் வீழ்த்திய கொல்கத்தா வீரர் ராணா அகர்வால் முகத்து முன்னாள் கேலி செய்யும் விதத்தில் சைகை காட்டினார். இதனால் அவருக்கு போட்டி கட்டணத்தில் இருந்து 60 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

# ஐ.பி.எல் டாஸ் வென்ற மும்பை இந்தியன்ஸ் அணி பந்துவீச்சை தேர்வு செய்தது




17வது ஐபிஎல் கிரிக்கெட் தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்களில் நடைபெற்று வருகிறது. இதில் இன்று இரண்டு ஆட்டங்கள் நடைபெற உள்ளது. அதன்படி, 2வது ஆட்டத்தில் குஜராத் டைட்டன்ஸ் மும்பை இந்தியன்ஸ் அணிகள் இன்று இரவு 7.30 மணிக்கு மோதுகினறன.

குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் உள்ள நரேந்திர மோடி மைதானத்தில் இப்போட்டி நடைபெறுகிறது. கடந்த இரண்டு சீசன்களாக குஜராத் அணிக்கு கேப்டனாக இருந்த ஹர்திக் பாண்ட்யா, இந்த முறை மும்பை அணி கேப்டனாக களமிறங்குகிறார். அதேநேரம், குஜராத் அணி கேப்டன் சுப்மன் கில் தலைமையில் முதல்முறையாக களமிறங்க உள்ளது. இதனால், இந்த போட்டியின் மீதான எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. அகமதாபாத் மைதானம் கடந்த தொடரில் பேட்ஸ்மேன்களுக்கு சாதகமாக இருந்ததால், பல போட்டிகளில் ரன் மழை பொழிந்தது. இன்றைய போட்டியிலும் ஆடுகளம் அதேநிலையில் தொடரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில், இந்த போட்டிக்கான டாஸ் போடப்பட்டது. இதில், டாஸ் வென்ற மும்பை ராயல்ஸ் அணி பந்துவீச்சை தேர்வு செய்துள்ளது. அதன்படி, குஜராத் டைட்டன்ஸ் அணி பேட்டிங் செய்ய முதலில் களமிறங்குகிறது.

# சாம்சன் அதிரடி: லக்னோ அணிக்கு 194 ரன்கள் இலக்கு நிர்ணயித்தது ராஜஸ்தான்




17வது ஐபிஎல் கிரிக்கெட் தொடரின் இன்றைய முதல் ஆட்டத்தில்ராஜஸ்தான்லக்னோஅணிகள்மோதுகின்றன.

இதில் டாஸ் வென்ற ராஜஸ்தான் ராயல்ஸ் அணி பேட்டிங்கை தேர்வு செய்துள்ளது.

அதன்படி, ராஜஸ்தான் ராயல்ஸ் அணியின் தொடக்க ஆட்டகாரர்களாக ஜெய்ஸ்வால் ஜாஸ் பட்லர் களமிறங்கினர். பட்லர் 11 ரன்னிலும் ஜெய்ஸ்வால் 24 ரன்னிலும் அவுட் ஆகினர். இதனையடுத்து கேப்டன் சாம்சன் மற்றும் பராக் ஜோடி அதிரடியாக விளையாடி ரன்களை சேர்த்தனர்.

சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய சாம்சன் அரை சதம் விளாசினார். மறுமுனையில் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய பராக் 29 பந்தில் 43 ரன்கள் எடுத்து வெளியேறினார். அடுத்து வந்த ஹெட்மயர் 5 ரன்களில் ஆட்டமிழந்தார்.

இறுதியில் ராஜஸ்தான் அணி 20 ஓவர் முடிவில் 4 விக்கெட்டுகளை இழந்து 193 ரன்கள் எடுத்தது. சாம்சன் கடைசி வரை ஆட்டமிழக்காமல் 82 ரன்கள் சேர்த்தார்.



**எழுமை எழுபிறப்பும் உள்ளுவர் தங்கண்**
**விழுமந் துடைத்தவர் நட்பு**

**விளக்கம்:**

**தம்முடைய துன்பத்தைப் போக்கி உதவியவரின் நட்பைப் பல்வேறு வகையான பிறவியிலும் மறவாமல் போற்றுவர் பெரியோர்.**

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
86670 25357
94436 99066

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.